# ஆசிரியர் தேர்வு வாரியம்

## பத்திரிக்கை செய்தி

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் இடைநிலை ஆசிரியர் நேரடி நியமனம் 2024 சார்ந்து வெளியிடப்பட்ட அறிவிக்கை எண். 01/2024, நாள் 09.02.2024, பின்சேர்ப்பு அறிவிக்கை எண். 01-A/2024, நாள். 16.07.2024 மற்றும் 26.03.2025 ன்படி 31.05.2025 மற்றும் 06.06.2025 ஆகிய தேதிகளில் வெளியிடப்பட்ட தற்காலிகத் தெரிவுப் பட்டியல்களுக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 (Tamil Nadu Government Servants Conditions of service Act, 2016) பிரிவு 3 (u) ன் படி காத்திருப்போர் பட்டியல் (Reserve List) இவ்வாரிய இணையதளத்தில் 11.03.2026 அன்று வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பயன்பாட்டுத் துறைகளிடமிருந்து பணியில் சேராத மற்றும் பணியில் சேர்ந்த பின்னர் பணித்துறப்பு செய்துள்ள பணித்தெரிவர்களின் விவரங்கள் இவ்வாரியத்தால் பெறப்பட்டது. இதன்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 ல் ஆணையிடப்பட்டுள்ளவாறு இப்பணிநாடுநர்கள் தெரிவு செய்யப்பட்ட அதே இனச்சுழற்சிகளுக்கு காத்திருப்போர் பட்டியலில் இடம் பெற்றிருந்த பணிநாடுநர்களிலிருந்து மதிப்பெண் மற்றும் இனச்சுழற்சி அடிப்படையில் தெரிவு நடைமுறை விதிமுறைகளை பின்பற்றி பணியில் சேராத / பணியில் சேர்ந்த பின்னர் பணித்துறப்பு செய்த பணியிடங்களுக்கு ஏற்கனவே வெளியிடப்பட்ட காத்திருப்போர் பட்டியலிலிருந்து (Reserve List) தற்காலிகத் தெரிவுப் பட்டியல் இவ்வாரிய இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பணிநாடுநர்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பயன்பாட்டுத்துறைகளின் நியமன அலுவலர்களால் உரிய விதிகளின்படி பணிநியமன ஆணைகள் வழங்கப்படும்.

நாள் : 15-10-2026

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

இடம்: சென்னை-6